Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4.00

# ஈழநாதம்

THE EELANATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 மாசி (03 - 02 - 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 350

## மாணவர் காப்புறுதியில் வடபகுதி புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

மாணவர்களுக்கான காப்புறுதித் திட்டத்தில் வடபகுதி மாணவர்கள் புறக்கணிப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட மேற்படி காப்புறுதித் திட்டம் தொடர்பாக வடபகுதிக் காப்புறுதிக் கூட்டுத்தாபன கிளை (4 ஆம் பக்கம் பார்க்க)

# பொருளாதார முயற்சிகளுக்கு திருமலையில் தமிழருக்கு தடை

## ஜனசவிய கொடுப்பனவுகளும் நிறுத்தம்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் தமிழ் மக்களுக்கு வழங்கி வந்த ஜனசவிய போன்ற உதவிகளை சிறிலங்கா அரசாங்கம் நிறுத்தியுள்ள அதேவேளை, தமிழர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடவோ, கூலிவேலைகள் செய்வதற்கோ இராணுவம் தடைவிதித்துள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரேமதாசா அரசாங்கத்தின் மகத்தான கண்டுபிடிப்பு என வர்ணிக்கப்படும் ஜனசக்தி திட்டத்தின் கீழான உணவுப்பொருள் கொடுப்பனவுகள் திருகோணமலை மாவட்டத்தின் தமிழ்க் கிராமங்களுக்கு வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது; இதனால் இன அழிவிற்கு உள்ளாகி உள்ள தமிழ் மக்கள் மேலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை அரசாங்க அதிபர் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்திற்கு வழங்க வேண்டிய கடந்த வருடக் கொடுப்பனவுகளை வழங்காமையினாலேயே ஜனசக்தி திட்டத்தின் கீழான உணவுக் கூப்பன் முத்திரைக்கு பொருள்கள் கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அத்துடன் ஜனசக்தி நிவாரணத்திற்கான பட்டியலில் இடம் பெறும் குடும்பங்களிலிருந்து ஒவ்வொருவரை முகாம்களில் வேலை செய்வதற்காக இராணுவத்தால் கட் (4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் -- இராணுவம் மாவிட்டபுரத்தில் மோதல்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நேற்றையதினம் ஏற்பட்ட மோதலில் பலத்த சேதங்களுடன் இராணுவம் பின்வாங்கிச் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை அகதிமுகாம் மீது விமானக் குண்டு வீச்சு

### மாணவி காலை இழந்தார்; மூவர் காயம்

(நல்லூர்)

கொக்குவில் கிழக்கு சிறீ இராம கிருஷ்ண மிஷன் சாரதா மகளிர் பாடசாலை நேற்றுப்பிற்பகல் 3.15 மணியளவில் சிறிலங்கா விமானப் படையின் குண்டு வீச்சுக்கு இலக்கானது. இந்தப்பாடசாலையில் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்திருந்த பல குடும்பங்கள் தங்கி இருந்தது தெரிந்ததே.

இரண்டு விமானங்கள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## முழங்காவில், நாச்சிக்குடா சந்தி விமானக் குண்டு வீச்சு

### இருவர் காயம், கட்டடங்கள் சேதம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள முழங்காவில், நாச்சிக்குடாச்சந்தி ஆகிய பகுதிகளில் நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதலில் இரண்டு பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்; வர்த்தக நிலையங்கள், பாடசாலைக்கட்டடங்கள், கமநல சேவை நிலையக் கட்டடம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆற்றைக் கடக்க முனைந்த குடும்பஸ்தர் மூழ்கி மரணம்

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஊற்றங்கரை ஆற்றைக் கடக்க முற்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் பெருவெள்ளத்தில் அள்ளுண்டு மரணமாகியுள்ளார்.

தேவன்பிட்டியைச் சேர்ந்த ஒருபிள்ளையின் தந்தையான திரு. பத்மநாதன் என்பவரே (4 ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு முகாமையாளர்களை ஒரு மாதமாகக் காணவில்லை

(மூதூர்)

மூதூர்ப் பகுதியில் டிசம்பர் மாதம் 28ஆம் திகதி கூப்பன் முத்திரைகளுக்கு உணவுப் பொருள்கள் எடுத்துவரச் சென்ற நான்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர்களைக் காணவில்லை என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேன்காமம், மணற்சேனை, கிளிவெட்டி, ஈச்சிலம்பத்தை ஆகிய கிராமங்களைச்சேர்ந்த சிவாஜிநாதன், மயில்வாகனம், ஞானம், ஞானசேகரன் ஆகிய முகாமையாளர்களே காணாமற் போனவர்களாவர்.

## நண்டு விற்றவர் சுட்டுக்கொலை

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் பாட்டாளிபுரத்தில் கடந்த முப்பதாம் திகதி நண்டு வியாபாரம் செய்து கொண்டிருந்த தருமன் என்பவர் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## வீரவணக்கம்

### செந்தில் சந்திரன் வாமதேவன்

(யாழ்ப்பாணம்)

மாவிட்ட புரத்தில் நேற்று 11-30 மணியளவில் வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடந்த மோதலில் செந்தில் (செல்லப்பா சுரேஸ்குமார், அளவெட்டி வடக்கு) சந்திரன், (இன்னையா குணசேகரன், கிளிநொச்சி) வாமதேவன் ஆகிய மூன்று போராளிகள் வீர மரணமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர். (மு)

## வாதரவத்தையில் ஹெலிதாக்கு

### இரு சிறுவர் படுகாயம் வாகனங்கள், வீடுகள் சேதம்

(செ: த. மை)

வாதரவத்தைப்பகுதியில் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் உலங்கு வானூர்தி ஒன்று மும்முறை தாழப் பறந்து உக்கிரமான தாக்குதலை மேற்கொண்டது. இத் தாக்குதலின் போது விவசாயத் திருத்தத்தில் ஈடுபட்டிருந்த லொறியும் உழவு இயந்திரமும் 10க்கு மேற்பட்ட வீடு (4 ஆம் பக்கம் பார்க்க)

## தென்னந் தோட்டத்தினுள் விமானக் குண்டு வீச்சு

(நல்லூர்)

நாவற்குழி அன்றீஸ் அன் கம்பனிக்கு முன்பாக உள்ள தென்னந் தோட்டப்பகுதி நேற்றுக்காலை 10.30 மணியளவில் சிறிலங்கா விமானப் படையின் குண்டு வீச்சுக்கு இலக்கானது. அதிகமான தென்னை மரங்கள் பலத்த சேதமடைந்துள்ளன. (ச)(85)

## அதிகாரிகள் அக்கறையீனத்தால் மாணவர்கள் சிரமம்

### அப்பியாசக் கொப்பிகள் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு அப்பியாசக் கொப்பிகளை எடுத்து வருவதற்கான தடைகள் நீக்கப் பட்ட போதிலும் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்கத்தவறியமையால் மாணவர்கள் தொடர்ந்தும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

யாழ். மாவட்டத்திற்கு (4ஆம் பக்கம் பார்க்க)

## முறிகண்டியில் குண்டு வீச்சு; மூவர் மரணம்; பலர் படுகாயம்

(கிளிநொச்சி)

முறிகண்டிப் பிள்ளையார் கோயிலைச் சூழவுள்ள பகுதிகளில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதலை நடத்தியுள்ளன;

இந்தத் தாக்குதலில் மூவர் ஸ்தலத்திலேயே பலியாயினர். மேலும்பலர் படுகாயமடைந்துள்ளனர். இரண்டு குண்டு வீச்சு விமானங்களும், ஹெலிக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்துச் சிரமத்தினால் நடவடிக்கை இல்லை

### - கல்விப்பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசக் கொப்பிகளை கொழும்பில் கொள்வனவு செய்து யாழ்ப்பாணம் எடுத்துவருவதற்கு யாழ். கல்வித்திணைக்களம் விரும்புகின்ற போதிலும் போக்குவரத்தின் போது ஏற்படும் சிரமங்களையும், கொப்பிகளுக்கு ஏற்படும் சேதங்களையும் கருத்திற் கொண்டு மேற்படி நடவடிக்கையை எடுக்க கல்வித் திணைக்களம் தயாராக இல்லை (4ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோரைக் கௌரவித்தனர்

(நல்லூர்)

இந்திய ஆக்கிரமிப்புப் படையின் அட்டூழியங்களுக்கு எதிராக 1989 மாசி 2ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய சாலை மறியல் போராட்டத்தின் போது இந்திய சிப்பாய்களினால் சுட்டுக்கொல்லப்பட்ட (4 ஆம் பக்கம் பார்க்க)

## நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கான நினைவஞ்சலிக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**போட்டோஸ்ராற்**

நல்லூரில் தரமான, தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும் கறுப்பு வெள்ளை புகைப்படங்களுக்கும் நாடுங்கள். சித்ராலயா 351, கோவில் வீதி, நல்லூர். (கோவில் வீதியில் கப்பன் கோட்ட முன்பாக) (B/1941)

**விற்பனைக்கு**

வேப்பெண்ணெய் வீட்டில் விளக்கெரிக்கக் கண்ணுக்குக் குளிர்ச்சி - மருந்தாகப் பாவிக்க போத்தல் ரூ 80/- மட்டுமே. திருநெல்வேலி, இணுவில், யாழ். நவீன சந்தை அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது. மிக்கவைற். (B-1960)

**தேவை**

சமுகித் துப்பரவு செய்யப்பட்ட முழு/அரைப் போத்தல்கள்:

மிக்கவைற்-யாழ்ப்பாணம். (B-1961)

**தேவை**

ஆங்கில மருந்து விற்பனை நிலையத்திற்கு பெண் இலிகிதர் தேவை. மருந்து விற்பனையில் அனுபவம் தேவை. சகுபக அத்தாட்சியுடன் 07-02-91 இல் நேரில் வரவும். வெஸ்லீ, 250 (470) ஆஸ்பத்திரி வீதி. (O P D முன்பாக) யாழ்நகர். (R-1075)



## 44 ஆம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம் 06 - 04 - 1968



வீரமரணம் 22 - 12 - 1990

### கப்டன் ஆஷா

(நடராசா பத்மாவதி கலா)

சிறிவரும் சிங்களப் படைகளை
மோதித் தடுத்திட மூண்டது போர்
எறிபட்ட கணையாலே இன்னுயிர் தந்தீர்
பொறிபடுவீர் வரலாற்றில் பொன்னெழுத்தால்!!

— நாயன்மார்கட்டு சனசமூக நிலையம்

(B/1968)


யாழ். கொண்டுவரப்படும்

# பணத் தொகையை அதிகரிக்க சில அதிகாரிகள் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். பரவட்டத்திற்கு கொழும்பில் இருந்து மாதாந்தம் எடுத்து வரப்படும் பணத்தை அதிகரிக்க கூட்டுப் படைகளின் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த சில அதிகாரிகள் தடைவிதித்துள்ளனர்

தற்போது மாதாந்தம் 50 மில்லியன் பணம் எடுத்து வரப்படுகின்றது இத்தொகையை 70 மில்லியனாக உயர்த்தும்படி யாழ் அரச அதிபர் கோரிய போது கொழும்பு அத்தியாவசிய சேவைகள் பிரிவு, கூட்டுப்படைகளின் தலைமையகம் போன்றவை ஒப்புதல் அளித்த போதிலும் இறுதி நேரத்தில் பணம் கப்பல் மூலம் எடுத்து வரப்படும் சமயத்தில் இக் கப்பல் போக்குவரத்துக்கு பொறுப்பாக இருக்கும் கூட்டுப்படைகளின் அதிகாரி ஒருவர் இம் முயற்சியை தடுத்துள்ளார்.

இந்த அதிகாரியின் மேற்படி நடவடிக்கையானது உத்தியோக பூர்வமற்ற இவ்வாத உணர்வில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.(ந)


## மரண அறிவித்தல்

### திருமதி றோசலின் அமிர்தரட்ணம் வல்லிபுரம்

''ராணி கொட்'' இருபாலை, கோப்பாயில் வாசம் செய்தவரும் காலம் சென்ற சாமுவேல் வல்லிபுரம் என்பவரின் அன்பு மனைவியும், புஸ்பமணி சே திர ஜ, ராசமலர் ஏபிரகாம், ஜோயிஸ் போப், சற்குணராணி ஜெயராஜா, அல்பேட் ஜெபநயகம் (போதகர் கானான் ஜெப ஆலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலம் சென்ற செபபாக்கியம் தம்பு (Sister - இலங்கை பெந்தெகொஸ்தே சபை) மேரி திரவியம் சுப்பிரமணியம், இலைசா தங்கரட்ணம் தம்பு விக்ரோரியா அன்னரட்ணம் தங்கரட்ணம் எனபோரின் சகோதரியுமாகிய றோசலின் அமிர்தரட்ணம் மகிமைக்குள் பிரவேசித்துவிட்டார். அன்னாரின் அடக்க ஆராதனை 05 02-91 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கானான் ஜெப ஆலயத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''ராணி கொட்''
இருபாலை,
கோப்பாய்.

தகவல்:
ஈ. ஏபிரகாம்
(மருமகன்)

(R/1076)



## 31ஆம் நாள் வீர அஞ்சலி



வீரவேங்கை

### கப்டன் அமலன்

தம்புத்துரைச்சாமி-விஜயசிங்கம் (விஜயம்)

மயிலிட்டி

வீரஜனனம் 10 - 3 - 69

வீரமரணம் 4 - 1 - 91

## 66ஆம் நாள் வீர அஞ்சலி



வீரவேங்கை

### யேக்கா

தம்புத்துரைச்சாமி-சிதாலட்சுமி (சிதா)

மயிலிட்டி

வீரஜனனம் 23 - 6 - 70

வீரமரணம் 30 - 11 - 90

மயிலிட்டி வேங்கையாய் திகழ்ந்தாய் அமலா - நீ
 செய்த சேவைகளோ மிகப்பெரிது
தமிழீழத்தை காக்கவே புறப்பட்டாய் அமலா - நீ
 எதிரிகளை அழிக்கவே புறப்பட்டாய்
ஐந்து ஆண்டுகள் போராடினாய் அமலா - நீ
 மக்களைக் காக்கவே போராடினாய்
உன் தங்கை யேக்காலவ இழந்தாய் அமலா - நீ
 மன உறுதியுடனே செயல்பட்டாய்
ஆனையிறவினிலே உறுதியுடன் நின்றாய் அமலா - நீ
 போர் நிறுத்த வேளையில் சினைப்பருக்கு இலக்கானாய்
உன் உடல் தான் எரிந்தது அமலா - உன்
 உயிர் எங்களை விட்டுப் பிரியவில்லை
உன் குடும்பமே தியாக வீடு அமலா - உன்
 பாதையை தொடர்ந்திடுவோம் அமலா!
எங்கள் அன்பு வீரவேங்கை யேக்காவே - நீ
 இனவெறி அரக்கர்களை அழிக்கவே புறப்பட்டாய்
புலியுடன் இருந்ததே ஆறுமாதம் - நீ
 அதற்குள் எங்களை விட்டுப் பிரிந்தாயோ!

(B-1964)

—குடும்பத்தினரும், நண்பர்களும்



## நினைவு கூருகின்றோம்!

### பெப்ரவரி 3

1989ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

**சின்னராஜேந்திரன்**

(நா. சிறிபாலன் - பிரதான வீதி, மன்னார்)

அவர்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

இரவில் வாங்கப்பட்ட
இந்திய சுதந்திரத்தை
இரவல் வாங்கிக்கொண்ட
இலங்கையின் சிங்களம்.
ஆங்கில ஆதிக்கம் அகன்ற நாளில்
செங்கம்பள விரிப்பில் நடந்து
எங்கள் நாட்டின் அரியணை மீதில்
சிங்களம் வந்து குந்திகொண்டது.
வடக்கு தேயவும், தெற்கு வாழவும்
அடுக்குமோ என்று ஆர்த்து எழுந்தவர்!
துடிப்புடன் நிமிர்ந்தனர்! வேங்கைகள்
படையினில் தம்மையும் இணைத்தவர்!
எய்திட வேண்டும் இலட்சியம் என்றே
செய்திட விரைந்தார், சென்றார்
 களத்திடை
செய்து முடித்திட முனைந்த வேள்வியில்
கொய்தனர் எதிரிகள் தலைகளை
 அதனால்
இன்று வரை தொடர்ந்துவரும்
இன்னல்கள் அறுந்திடவும்,
பொங்கிடும் இன்பத்தாலே
இப்பூமி செழித்திடவும்
தன்னையே தந்தார் நாமம் தரையினில்
என்றும் வாழும்!
எம்மவர் நினைவில் நிற்கும்!

— விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-1918)

★ சிந்தனைக்கு ★

ஆகாயக் கோட்டை கட்டுவதற்கு கட்டடக் கலையின் விதிமுறைகள் எதுவும் கிடையாது.

— ஜி. கே செஸ்ட்டர்ட்டன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 03 02-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த பெ எண் 05

# மணலைக்கயிறாக்கும் முயற்சி

விடுதலைப் புலிகளைத் தவிர்த்து கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் மூலம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியாவும் - சிறிலங்கா அரசாங்கமும் முயற்சிப்பதாக சிறிலங்கா ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகரான பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இதனை உறுதிப்படுத்துவதுபோல் சிறிலங்கா ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின் பத்திரிகையாளருக்கு பேட்டி அளித்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் முஸ்குந்துபே சிறிலங்காவிடம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறோ, அல்லது யுத்த நிறுத்தம் செய்யுமாறோ தாம் கோரவில்லை எனவும் தெரிவித்தார் மேலும் அந்தப் பேட்டியில் விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்த சிறிலங்கா அரசாங்கம் அதிகாரப்பரவலாக்கலை மேற்கொள்ள வேண்டும் என சிறிலங்காவிற்கு ஆலோசனையும் கூறியுள்ளார்.

அதாவது விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் சிறிலங்கா இராணுவத்தால் வெற்றிகொள்ளப்படவேண்டும் என இந்தியா எதிர்பார்க்கின்றது அத்தோடு கொழும்பில் வாழும் ஏனைய தமிழ்க் குழுக்கள் பலப்படுத்தப்பட வேண்டும் எனவும் இந்தியா எதிர்பார்க்கின்றது இதன் வெளிப்பாடே இந்தியவெளிவிவகார அமைச்சர் கொழும்பில் உள்ள ஏழுதமிழ்க்குழுக்களையும் சந்தித்துப்பேசியதாகும். இதனை பிரட்மன் வீரக்கோனும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்த நிகழ்ச்சிகளானது இலங்கைத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையில் இந்தியாவும் சிறிலங்காவும் இன்னமும் பழைய கொள்கைகளில் இருந்து மாறவில்லை என்பதையே தெளிவுபடுத்துகின்றது.

அதாவது தமிழ் மக்கள் மீது தாம் விரும்பிய ஒரு தீர்வைத் திணிப்பதும் தமிழ் மக்களின் பாதுகாவலர்களாகவுள்ள விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதும் என்பதே அவர்களது பழைய கொள்கைகளாகும்.

இதில் முதலாவதாக விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பது அவர்கள் இலக்காகவுள்ளது. ஏனெனில் தமிழர் மீது எந்தத் திணிப்பையோ அல்லது பிரச்சாரத்தையோ நிர்த்துவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிக்கப் போவதில்லை என்பதனாலாகும். இதற்கு கடந்தகால அனுபவங்களே போதுமானவையாகும்.

அடுத்ததாக சொந்தமண்ணிலும், மக்கள் மனத்திலும் நிலைத்துநிற்க முடியாது ஓடிப்போன தமிழ்க் குழுக்களின் மூலம் ஒரு பொம்மை அரசாங்கத்தை நிறுவுவதாகும். அதாவது கடந்தகால வடக்கு - கிழக்கு மாகாணசபை போன்றதொரு சபையை நிறுவுதலாகும்.

இவ்வாறு இந்தியாவை இந்தப் பிரச்சினையில் சிறிலங்காவுடன் இணைய வைத்தது தமிழீழ விடுதலைப் போராட்டமேயாகும். விடுதலைப் புலிகளின் கடந்தகால போராட்ட வரலாறு இலங்கையில் தமிழர் தேசிய இனப் போராட்டத்தை மட்டும் வளர்த்ததாகவில்லை தென் ஆசியாவில் உள்ள பல தேசிய இனங்களுக்கு தங்கள் சுயநிர்ணய உரிமையைப் பற்றிச் சிந்திக்க வைத்ததோடு தேசிய இனப் போராட்டங்களை வெற்றிகரமாக எந்தப் பெரிய வல்லரசுகளுக்கும் எதிராக நடத்தலாம் என்ற உந்து சக்தியாகவும் அமைந்துள்ளது அதிலும் குறிப்பாக பல் தேசிய இன, மத மக்கள் வாழும் இந்தியாவில் தேசிய இனங்கள் தமது சுயநிர்ணயத்தைப் பற்றிச் சிந்திக்க வைத்துள்ளதெனலாம். இது இந்தியாவைப் பொறுத்து மிகவும் அச்சமூட்டுவதாகவுள்ளது.

ஏனெனில் இந்தியா பெயரளவில் மட்டும் சமஷ்டி அரசியலமைப்பைக் கொண்ட ஒரு நாடு ஆனால் உண்மையில் மத்திய அரசிடம் அதிகாரங்கள் முழுவதும் குவிந்து கிடக்கின்றன. அத்தோடு அரசியல்வாதிகள் யாவரும் குறுகிய நோக்கங் கொண்ட அதிகார ஆசை கொண்டவர்களாகவும் தேசிய நலனில் அக்கறையற்ற வகுப்புவாதப்போக்குடையவர்களாகவும் உள்ளனர் இதனை இன்றைய இந்திய அரசியலில் பரவலாகக் காணலாம்.

இந்நிலையில் இனப்படுகொலையில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா அரசாங்கத்துடன் இந்திய அரசாங்கம் ஒத்துப் போவது தவிர்க்க முடியாததுதான். ஆனால், தேசிய இனப்போராட்டங்களை தாம் விரும்பியவாறு கையாளலாம் என இரு அரசுகளும் எண்ணுவது தான் தவறானதாகும். அதிலும் தமிழ்மக்களையும், அவர்களதுபோராட்டத்தையும், அதை வழிநடத்தும் புலிகளையும் அவ்வாறு எண்ணுதல் மிகவும் தப்பாகும்.

ஏனெனில் பிரச்சினையின் தீர்வு மண்ணுடனும் அதில் வாழும் மக்களுடன் தொடர்புடையது மண்ணிலிருந்து மக்களால் விரட்டப்பட்டவர்களுடன் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அவ்வாறு தீர்வு காண்பதாக இருந்தால் அது சிலவேளை தமிழீழ மண்ணில் வாழாத தமிழருக்குரிய தீர்வாக இருக்கலாம்.

# உடைந்த வீடுகளில் உடையாத உள்ளங்கள்

வீடு வீடாகச் சென்றதில் பல விபரங்களைச் சேகரிக்க முடிந்தது இந்த விமானத் தாக்குதல்களில் முதன் முதலில் உயிரிழந்த பெண் ஆதி கோவிலடியைச் சேர்ந்த தங்கவேலாயுதம் நவரத்தினம் என்ற 40 வயதுப் பெண்ணாகும். சிவகுரு வித்தியாசாலையில் கல்வி பயிலும் ஆதிகோவிலடியைச் சேர்ந்த 8 வயது மாணவி இவனேந்திரன் அன்புக்கரசி, 20 வயதான இராசேந்திரம் அன்பழகன், பாலுரஜனி என்ற 2 மாதப் பெண் குழந்தை, தண்டாயுதபாணி மகேஸ் என்ற மண்ணெண்ணெய் வியாபாரி, கடற்றொழில் செய்துவரும் 60 வயதான சிங்காரம் தில்லையம்பலம் (7பிள்ளைகளின் தந்தை), திருமேனிப்பிள்ளை காஞ்சனாதேவி (24 வயது) ஆகியோர் முதல்நாள் தாக்குதலில் இறந்த ஏனையோராவார். (20ஆம் திகதி)

அடுத்தநாள் காலை தொடர்ந்த தாக்குதலில் காரைநகரைச் சேர்ந்த சுகுனி என்பவரும், தவராஜா (கடற்றொழில் செய்பவர்) என்பவரும் இறந்தனர்.

இதில் காஞ்சனாதேவி பதுங்கு குழியின் வாசலில் நின்ற போது இறந்தார். இவரது சகோதரிகளான தி. கமலாதேவி, தி. சரோஜினிதேவி என்போர் படுகாயமடைந்தனர். மூடப்பட்ட பதுங்கு குழியில் இருந்து இவர்கள் மீட்டெடுக்கப்பட்டனர். பதுங்கு குழிகள் இருந்ததினால் தான் உயிரிழப்புகள் மிகக் குறைவாக இருந்தன: இல்லாவிடில் மிகவும் கூடுதலான உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கும்.

இலங்கையில் சன நெருக்கம் அடர்த்தியான இடம் என்று குறிப்பிடப் படுவது காத்தான்குடி. அடுத்தது வல்வெட்டித்துறை அதிகோவிலடி ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு, மூன்று குடும்பங்கள் உள்ளன. கடற்றொழில் செய்பவர்கள் கூட்டாகவே தொழிலுக்குப் புறப்படுவதாலும், ஒரேவள்ளத்தில் செல்பவர்கள் பெரும்பாலும் இரத்த உறவினர்களாக இருப்பதாலும், எல்லோரும் ஒரேஇடத்தில் இருக்க வேண்டியேற்படுகிறது அதனால்தான் மீன்பிடிக்கிராமங்கள் நெருக்கமான குடியிருப்பைக் கொண்டுள்ளன. வீடுகளுக்கு முற்றம் இல்லை; பதுங்கு குழிக்கே இடம் ஒதுக்குவது கஷ்டம். இதனால் கடற்கரையை அண்டி பல பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டிருந்தன. இவை பொதுப் பதுங்குகுழிகள் என அழைக்கப்பட்டன. முன்னர் பொது இடங்களில் பொதுமலசல கூடம் அமைத்திருக்கக் காணலாம். காலத்தின் தேவை பொது பதுங்கு குழிகளை உருவாக்கியுள்ளது. விமானத்தாக்குதலினால் உடைந்த வீடுகள், கிணறுகளையும் பதுங்குகுழிகளையும் மூடியுள்ளன பதுங்கு குழிகள் ஒவ்வொன்றிலும் 35 பேருக்குக் குறையாமல் இருந்திருக்கின்றனர்.

> கூட்டுச் செயற்பாடுகளுக்கு வல்வை ஒரு முன்னுதாரணமான இடம். பொழியும் குண்டு மழைக்குள் பதுங்குகுழிகளுள் சிக்கிக் கொண்டோரைக் காப்பாற்ற போர்க்கால முதலுதவி சிகிச்சை நிலையம் எடுத்துக் கொண்ட முயற்சி நிச்சயம் பாராட்டப்பட்டே ஆக வேண்டும்.

### அதிர்வில் பறந்த குழந்தை

பாலுஎன்பவரின் மனைவி பதுங்குகுழிக்குள் இறங்கி நின்று தாயாரிடம் குழந்தையை வாங்கிக் கொண்டிருந்தார். அப்போது Y - 12 போட்ட குண்டின் அதிர்வினால் குழந்தை தூக்கி வீசப்பட்டது. குழந்தையின் நரம்புகள் பாதிக்கப்பட்டன மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இந்த இரண்டு மாதக் குழந்தையின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

### தொண்டர் அணியின் பணி

ஒவ்வொரு விமானத்தாக்குதலின் இடைவெளியின் போதும் தொண்டர் படையின் பணி மகத்தானதாக அமைந்திருக்கின்றது. அவர்கள் தான் விரைந்து சென்று பதுங்கு குழிகளில் இருந்து மக்களை மீட்டெடுத்திருக்கின்றார்கள். ஒருவரையொருவர் காப்பாற்றுவதில் இருந்த கூட்டுச்செயற்பாடு ஏனையோருக்கு முன்னுதாரணமாகும். இதமபராக் கல்லூரியில் கல்வி கற்பித்து ஓய்வுபெற்ற ஆசிரியர் பொன்னுச்சாமி பாலசுந்தரம் பிள்ளை வல்வைக் கல்வி மன்றத்தில் இருந்து ஓடிவந்த பிள்ளைகளைக்கண்டு வெளியே வந்து, பிள்ளைகளை உள்ளே விட்டு விட்டு இடம் இல்லாத காரணத்தால் வெளியேபடுத்திருந்தார். வல்வைக் கல்வி மன்றத்தைத் தாக்கிய 400 கிலோ குண்டின் பாகமொன்று இவரது தலையைத் துளைத்தது இவர்மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

வர்த்தகர் சங்கம். விழிப்புக் குழு, கோவில் நிர்வாகக் குழு...என பல்வேறு வடிவங்களில் தொண்டாற்றி வரும் பிரேம்குமார் என்பவரை அவதானித்தோம். சுறுசுறுப்பாக பொதுப்பணிகளில் அங்கே இங்கே என்று ஓடிக்கொண்டிருந்தார். இவரை இழுத்துப் பிடித்து பேட்டி கண்டோம். சேதமடைந்த செபஸ்தியார் ஆலயத்தின் முன்பாக இவரை வைத்து பரதன் தொலைக்காட்சியில் படமாக்கினார். 3 30 மணிக்கு

> பதுங்கு குழியில் இருந்து வெளியே வந்து மாணவர்களை பதுங்கு குழிக்குள் அனுப்பி விட்டு அங்கு இடமில்லாத காரணத்தால் வெளியே படுத்த பொன்னுச்சாமி பாலசுந்தரம் பிள்ளை என்ற ஆசிரியரின் தலையை பொம்பர் குண்டுகளின் பாகங்கள் துளைத்தன.

இப்படி நடந்தது. 4 30 மணிக்குஇப்படிநடந்ததுஎன்று விபரமாக கூறினார் இவரை அனுப்பி விட்டு இவரைப் பற்றி ஆராய்ந்தோம. குடும்பத்தினரை பாதுகாப்பாக அனுப்பி விட்டு பொழிந்து கொண்டிருக்கும் பொம்மர் குண்டுகளின் மத்தியில் விரைந்து சென்று பதுங்கு குழிகளுக்குள் இருப்போரை மீட்டெடுக்க இளைஞர்களை திரட்டிக் கொண்டு சுறுசுறுப்பாக களத்தில் இறங்கியவர் இவர் என்று தெரியவந்தது. இவரது கடை இறந்தே கிடந்தது. காகங்களும், ஆடுகளும் கடையின் பொருள்களை பங்கிட்டுக் கொள்வதை அவதானிக்க முடிந்தது. ஏன் இக்கடையின் பொருள்களை பாதுகாக்க முடியாது என்று ஆராய்ந்தோம். அவரது வீடும் சேதமடைந்து விட்டது இவற்றைக் கொண்டு போய் வைக்க இடமில்லை என்று தெரியவந்தது.

(தொடரும்)

# வவுனியாவில் தமிழா வீடுகள் இராணுவத்தினரால் தகர்ப்பு

(வவுனியா)

வவுனியா காமினி பாடசாலைப் பகுதியில் இராணுவ முகாமை அண்டியுள்ள வீடுகளையும், கடைகளையும், கட்டடங்களையும் தகர்த்துத் தரை மட்டமாக்குவதற்கு இராணுவஅதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான முன் நடவடிக்கையாக தற்போது குருமன்காடு பகுதியில் பல வீடுகள் இராணுவத்தினரால் தரை மட்டமாக்கப்பட்டுள்ளன.

இராணுவ அதிகாரிகளின் இத்திட்டத்தினால் வவுனியா நகரப்பகுதியில் தமிழ்மக்களுக்குச் சொந்தமான நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் அழிக்கப் படலாம் என்று கருதப்படுகிறது.

வவுனியா - மன்னார் வீதியிலும், வவுனியா - யாழ். வீதியிலும் உள்ள வீடுகளே அழிக்கப்படும் என்று வவுனியா நகரக் கமாண்டரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# இயந்திரத்தில் சிக்கியவர் படுகாயம்

(கிளிநொச்சி)

நெல் குற்றும் ஆலை யொன்றின் இயந்திரப் பட்டியில் சிக்கிக் கொண்ட ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி பி. எம்: பி. ஆலையில் தொழில் புரியும் ப போகலிங்கம் (வயது 26) என்பவர் இயந்திரப் பட்டியை பாய்ந்துகடக்க முயன்றபோது பட்டியின்சுழற்சியில் சிக்குண்டு படுகாயமடைந்துள்ளார். (க)

# மத்தியகல்லூரி மாணவர் இரத்ததானம்

யாழ் மத்திய கல்லூரி உயர்தர மாணவர்கள் பலர் கடந்த புதன்கிழமை இரத்த தானம் வழங்கினர் இதில் ஒன்பது (9) பேர் "O" குறூப் இரத்தம் வழங்கினர்.

இரத்த வங்கியில் இரத்தம் இல்லை என்று வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கும்பட்சத்தில் தாம்மேலும் இரத்ததானம் செய்ய தயாராக உள்ளதாக யாழ் மத்திய கல்லூரி மாணவர்கள் இரத்த வங்கி அதிகாரிக்கு தெரிவித்தார்கள்.

இ. காங்கிரஸ், அ. தி. மு. க.

# நிர்ப்பந்தத்தின் பேரில் நான் தி. மு. க. அரசைக் கலைக்கவில்லை

— சந்திரசேகர்

(சென்னை)

தமிழ் நாட்டில் கருணாநிதி அமைச்சரவையைக் கலைத்ததை ஆட்சேபித்து வருகின்ற புதன்கிழமையன்று 'பந்' நடத்தப்பட இருப்பதைப்பிரதமர் சந்திரசேகர் குறைகூறியிருக்கிறார்.

'பந்'துக்கு அழைப்பு விட்டிருப்பது நாட்டுக்கு ஆற்றும் சேவையல்ல என்றும் கூறினார். தமிழ்நாட்டுநிலைமையைமேம்படுத்துமாறு தாம் விடுத்த கோரிக்கையைத் தமிழக அரசு கவனிக்காததால் தாம் தமிழக அரசாங்கத்தைக் கலைக்க வேண்டி வந்தது என்றும் பிரதமர் நேற்று ஜனதாதள்(எஸ்) மாநாட்டை முடித்து வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ், அ. இ. அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் நிர்ப்பந்தத்தில் தான் செயற்பட்டதாகக் கூறும் குற்றச்சாட்டைப் பிரதமர் மறுத்தார்.

திராவிட முன்னேற்றக்கழக அரசைக்கலைத்ததைஆட்சேபித்து தேசிய முன்னணியும், அதன் சார்புக் கட்சிகளும் புதன்கிழமை நடாத்த இருக்கும் 'பந்' நாடு முழுவதும் குழப்பத்தையும் சீர்குலைவையும் ஏற்படுத்த நோக்கமுள்ளதென்றும், உள்நாட்டிலும்வெளிநாட்டிலும் பல சவால்களை எதிர் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் இந்த 'பந்' கண்டிக்கப்படத் தக்கது என்றும் இந்திய ஐக்கிய பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலர் மதுசென் நேற்றுச் சென்னையில் விடுத்த அறிக்கையில் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக்கழக அரசு கலைக்கப்பட்ட நான்காவது நாளான நேற்றுவரை சில வன்செயல்களைத்தவிர பொதுவாக அமைதி நிலவியது புதன்கிழமை முதல் தமிழ் நாடு எங்கும் கைது செய்யப்பட்டவரின் தொகை 4,000 ஆக உயர்ந்துள்ளது.

## பொருளாதார ஒத்துழைப்பு

தற்போது சீனா சென்றிருக்கும் இந்திய வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்லா வர்த்தகம் மற்றும் பொருளாதாரத் துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்புக் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாக அகில இந்திய வானொலி கூறியது. இந்தியாவில் பம்பாயிலும், சீனாவின் ஷங்காயிலும், கான்சிலேட் அலுவலகங்களைத் திறக்கவும் இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

## பேச்சுவார்த்தை தோல்வி

சோவியத்யூனியனின் அதிபர் கொர்பச்சேவுக்கும் பதினைந்து குடியரசுகளின் தலைவர்களுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் அந்நாட்டின் வருங்காலத்திற்கான எந்தவித உடன்படிக்கையும் எட்டப்படாமலேயே முறிவடைந்து விட்டன என ஏஜென்சிச் செய்திகள் கூறியுள்ளன.

### இரு சிறுவர்

களும் விக்னேஸ்வரா சனசமூகநிலையமும் பலத்த சேதமடைந்தன.

விளையாடிக் கொண்டிருந்த இரு சிறுவர்களான வாதரவத்தையைச் சேர்ந்த கு. பாரதிதாசன் (வயது 11), வி. சுதாகரன் (வயது 11) என்பவர்கள் படுகாயமடைந்தனர்.

### முறிகண்டியில

கொட்டர் ஒன்றும் நேற்று முன்தினம் பிற்பகல் 4 30மணியளவில் இந்தத் தாக்குதலில் சுடுபட்டன.

நாகராசா (வயது 32), நாகராஜா லோஜினி (வயது02), பாடசாலைச் சிறுவனான தங்கையா சேந்திரகுமார் (வயது 12) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். (49)

### பாடசாலை அகதி

நான்கு குண்டுகளை வீசிச் சென்றன. இதனால் செல்வரத்தினம் கீதா (வயது 16 தையிட்டி) என்பவர் ஒருகால் சிதறிப் படுகாயம் அடைந்தார். மேலும் சின்னத்தம்பி அம்பிகாபதி (வயது 55) என்பவரும், அவரது மகள் பிரேமாவதி (வயது 27) கொக்குவில் இழக்கு, சிறிஸ்கந்தராசா (49 வயது) ஆகியோர் காயமடைந்துள்ளனர். இத்தாக்குதலில் பாடசாலைக்கட்டடமொன்று முற்றாகச்சேதமாக்கப்பட்டது அம்பிகாபதி என்பவரின் வீடும் பலத்த சேதமடைந்தது. (85, க, மு)

### புலிகள்

சென்றஜ. புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீரமரணம் அடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 11 30மணியளவில் மாவிட்டபுரத்தில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினர் வெளியேற முற்பட்டபோது விடுதலைப்புலிகள் எதிர்த்தாக்குதல் மேற்கொண்டனர். நீண்ட நேரம் நடைபெற்ற இந்த மோதலில் பலத்த சேதங்களுடன் இராணுவம் பின்வாங்கிச்சென்றது. சேத எண்ணிக்கை விபரம் தெரியவில்லை. (மு)

### முழங்காவில

என்பன பலத்த சேதமாக்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை 8 45 மணியளவில சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் மன்னாரிலுள்ள முழங்காவில், நச்சிக்குடாச்சநதி ஆகிய பகுதிகளில் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் முழங்காவிலைச்சேர்ந்த சிவகுரு (54), சந்திரன்(30) ஆகிய இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலினால் நாச்சிக்குடாச் சந்தியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம், கிராமமுன்னேற்றச்சங்கக் கட்டடம், நான்கு கடைகள் என்பனவும் முழங்காவிலில் பாடசாலைக் கட்டடங்கள் இரண்டும் சுகநல சேவை நிலையக் கட்டடம் என்பன பலத்த சேதமடைந்தன. (மு)

### பெற்றோரைக்

சி. ஜெகநாதன், த. சந்திரமோகன் ஆகியோரது நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று முன் தினம் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

நினைவுக்கூட்டத்தில் ஜெகநாதனின் பெற்றோருக்கு அவரின் சகமாணவர்களால் ஒரு லட்சம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அத்துடன் ஜெகநாதனின் பெயரில் புலமைப்பரிசில் ஒன்றை ஆரம்பிப்பதற்காகப் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் ரூ 14000 நிதி சமர்ப்பிக்கப்பட்டது இதுதவிர, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் இருவரின்பெற்றோர்களுக்கும் தலாரூபா 47 ஆயிரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

### நினைவஞ்சலி

கூட்டம் ஒன்று எதிர்வரும் ஐந்தாம்திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது.

படுகொலை செய்யப்பட்ட மாணவர்களான என். இருபாகரன், ரி. தயாளன் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இந்தக் கூட்டத்தை மட்டு. அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றியம் ஒழுங்கு செய்துள்ளது. (க)

### பொருளாதார

டயத்தின் பேரில் அழைத்துச் செல்கின்றனர். மேலும் இராணுவ நடமாட்டம் அதிகரித்திருக்கும் தமிழ் கிராமங்களில்பயிர்ச் செய்கையில் ஈடுபடவோ, கூலிவேலைக்குத் தானும்வெளியிடங்களுக்குச் செல்லவோ இராணுவம் அனுமதிப்பதில்லை எனவும் தெரிய வருகிறது.

### அதிகாரிகள்

தேவையான கொப்பிகளை செயலகத்தியாவசியபிரிவின் ஊடாக எடுத்துவருவதற்கு கட்டுநிதி வந்துசேராத காரணத்தினால் முடியவில்லை என அரச அதிபர் தெரிவித்தார் எனினும் பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களுடன் ஆலோசனை நடாத்தி இம்முயற்சிக்கு அவர்கள் முன்வந்தால், தான் இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகவும் தெரிவித்தார். (க)

### மாணவர்

அலுவலகங்களுக்கு எந்தவித மான சுற்றுநிருபமும் அனுப்பி வைக்கப்படவில்லை.

ஆனால் இலங்கையின் ஏனைய பகுதிகளில் இந்தத் திட்டம் கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் சிறப்பாக நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது. (க)

## மரண அறிவித்தல்

### திரு. காசிப்பிள்ளை சிவராஜா


இணுவில் பாலாவோடையைச்சேர்ந்த காசிப்பிள்ளை நாகேஸ்வரி தம்பதிகளின் அருமைப்புதல்வன் சிவராஜா நேற்று அகாலமரணமானார். இவர் வசந்தியின் அன்புக் கணவரும், சாந்தினி, சரோஜினி ஆகியோரின் அருமைச் சகோதரனும், திரு. கரு தி துரைராஜா தங்கரத்தினத்தின் மருமகனும் சிவலிங்கராஜா, ஜெயலிங்கராஜா, தங்கராஜா, வரதராஜா, யோகராஜா, ஜெயந்தி, சுமதி, சுகந்தி ஆகியோரின் மைத்துனரும், விஜயலக்ஷ்மியின் சகோதரனுமாவர் இவரின் ஈமக்கிரியைகள் இன்று (3.2.91) காலை 10.00 மணிக்கு அன்னாரின் மைத்துனரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
து. ஜெயலிங்கராஜா.

"திருப்பதி இல்லம்",
மலைவேம்படி ஒழுங்கை
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(B/1972)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# 17 ஆம் நாள் வளைகுடாப் போர்

★ பெருமளவிலான வெடி மருந்துகளையும், இராணுவ உபகரணங்களையும் ஏற்றிவரும் கட்டார் கப்பலொன்று சுவிஸ் கால்வாய் வழியாகப் பிரயாணத்தைத் தொடர எகிப்திய அரசாங்கம் அனுமதி வழங்க மறுத்துள்ளது.

## உடன் தரைப்போர் இல்லை

★ ஈராக் ஜனாதிபதி விரும்புவது போன்று தரைமார்க்கமான யுத்தத்தில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் உடனடியாக இறங்காது என அமெரிக்க அதிபர் கூறியுள்ளார்.

★ ஜோர்தானுக்கு மேலாகப் பறந்துசென்று ஈராக்கின் மேலான விமானத் தாக்குதலை நடத்த இஸ்ரேல் திட்டமிட்டு வருவதாக இஸ்ரேலிய விமானப்படை அதிகாரி கூறியுள்ளார்.

★ நேற்று முன்தினம் ஈராக் துருப்புக்களுடன் நடந்த சண்டையின் போது அமெரிக்கக் குண்டு வீச்சு விமானங்கள் இரண்டு தடவைகள் தமது தரப்பினர் நிலைகொண்ட இலக்குகள் மீது குண்டுகளைப் போட்டதாகச் சொல்லப்படுகிறது. இது தவறுதலாக இடம்பெற்றுவிட்டதாக அதிகாரிகள் கூறினர். எனினும் இக்குண்டுகள் குறித்த இலக்குகளில் விழவில்லை என்றும், இதனால் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டதாகவும் றியாட்டிலிருக்கும் அமெரிக்க இராணுவ அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

★ ஈராக் தொடுத்த தரை மார்க்கத் தாக்குதலின்போது கொல்லப்பட்ட பதினொரு அமெரிக்கக் கடற்படையினரும் தமது தரப்பினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினாலேயே உயிரிழந்திருக்கும் சாத்தியம் பற்றி ஆராய அமெரிக்க இராணுவம் புலன் விசாரணையொன்றைத் தொடக்கியுள்ளது.

★ ஈரான் முழுவதிலும் வெள்ளிக்கிழமையன்று மாபெரும் ஆர்ப்பாட்டங்களும், ஈராக்கிற்கு எதிரான கூட்டுப்படைகளின் தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவிக்கும் பேரணிகளும் இடம்பெற்றதாகத் தெரிய வருகிறது.

★ ஈரானின் வானவெளிப் பிரதேசத்தினூடாகப் பறந்து வரும் கூட்டுப் படைகள் விமானங்கள் ஈராக்கின்மேல் தாக்குதல் நடத்தி வருகின்றன என்ற ஈராக்கின் குற்றச்சாட்டை ஈரான் நிராகரித்துள்ளது.

★ மக்கள் மத்தியிலிருந்து பலத்த எதிர்ப்புகள் கிளம்பியுள்ளபோதிலும் சவூதி அரேபியாவிற்கு கூட்டுப்படைகளுக்கு அனுசரணையாக அனுப்பப்பட்ட தமது துருப்புக்கள் வாபஸ் பெறப்படமாட்டாது என மொறாக்கோ மன்னர் ஹசன் அறிவித்துள்ளார்.

## அரபாத் குற்றச்சாட்டு

★ ஈராக்கின் மீது குரூஸ் ஏவுகணைத் தாக்குதல்களை இன்றேக் நடத்திவருவதாகப் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் குற்றஞ்சாட்டியுள்ளார். சி. என். என். தொலைக்காட்சிக்கு அவர் வழங்கிய பேட்டியொன்றில் வளைகுடாவில் போர் நிறுத்தமொன்றை ஏற்படுத்தவும், இப்பகுதியிலுள்ள சகல பிரச்சினைகளுக்குமான தீர்வொன்றைக்காணவும் சதாம்ஹுசைன் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

★ வளைகுடாவில் யுத்தம் தொடர்வதனால் சமாதான முயற்சிகளுக்கு இடமில்லை எனக் கூறிவிட முடியாது என்று ஐ. நா. செயலாளர் வானொலி நிகழ்ச்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

★ காப்ஜி நகரை மீட்டு விட்டதாக சவூதி அரேபியப்படைகள் அறிவித்த மறுநாள் மீண்டும் பலத்த சண்டைகள் இடம்பெறுவதாகச்செய்திகள் கூறுகின்றன. இச்சண்டைகளில் 30 ஈராக்கியர் கொல்லப்பட்டதாகவும், 300 பேர் சிறைபிடிக்கப்பட்டதாகவும், தமது தரப்பில் 5 பேர் உயிரிழந்ததாகவும் றியாட்டில் சவூதி அரேபியா கூறியது. ஆனால் இதற்குமுன் 300 ஈராக்கிய துருப்புக்களைக் கொன்றதாக வெளியிட்ட செய்திகளை பிரிட்டிஷ் செய்தி நிறுவனங்கள் வாபஸ்பெற்றுள்ளன.

### ஆற்றைக்கடக்க

இவ்வாறு பரிதாபகரமாக வெள்ளத்தில் அள்ளுண்டு மரணமாகியுள்ளார்.

ஆற்றில் கரையொதுங்கிய இவரது சடலம் உறவினர்களால் அடக்கம் செய்யப்பட்டது. (மு)

### போக்குவரத்துச்

என்று கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கல்வித்திணைக்களம் கொப்பிகளைக் கொள்வனவு செய்வதற்கு எவ்வித தடைகளும் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. (க)

## மாதாந்த ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சி இன்று காலை பத்து மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது. அனைத்து உறுப்பினர்களையும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட மாணவர் இயக்கப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (மு)